3

# முறிந்துபோன தன்மையின் ஆசீர்வாதம்

## (2:1-10)

*ஒரு ஏழை விவசாயினுடைய மகன் ஏழ்மையில் வளர்ந்தான். அவன் சிறுபிள்ளையாயிருந்தபோதே தங்களின் பண்ணைக்கு அருகில் இருந்த ஒரு சிறிய சமூக சபைக்குத் சென்றான். அவன் தேவன் மீது விசுவாசமாயிருக்கும் படி போதிக்கப்பட்டான். அவனது தாயும் தகப்பனும், தங்களுக்கே உரித்தான எளிய வகையில் தேவன் மீது நம்பிக்கை வைத்து, அவரைத் சார்ந் திருந்தனர். அவர்கள் ஒரு எளிய வாழ்க்கையை வாழ்வதற்கு மண்ணில் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது.*

*இந்தப் பையன் வளர்ந்தபோது, தான் இனியும் ஏழையாகவே இருக்கக் கூடாது என்று தீர்மானம் செய்தான். மிகுந்த செல்வாக்குள்ள வாழ்க்கைக் கான அவனது விருப்பமானது அவனுக்குள் ஒரு மோகமாயிற்று. செல்வத் திற்கான அவனது தேடுதலில் அவன், நிலத்தின் விலைகள் உயர்ந்து கொண்டிருந்த வேளையில் நிலம் வாங்கி விற்கும் தொழிலில் ஈடுபட லானான். குறுகிய காலத்தில், தானே கற்பனை செய்திருந்ததைக் காட்டிலும் மிகுந்த செல்வந்தன் ஆனான்.*

*அவன் ஒரு பெரிய வீட்டைக் கட்டினான், விலை உயர்ந்த கார்களை வாங்கினான், மற்றும் தனது வியாபார ஆர்வங்களை விரிவாக்கினான். அவனும் அவனது குடும்பத்தாரும் வசதியான வாழ்வுநடை ஒன்றை மகிழ்வுடன் அனுபவித்தனர். பின்பு பொருளாதாரம் பலவீனமாகத் தொடங்கிற்று. நிலங்களின் மதிப்புகள் வெகுவாகக் குறையத் தொடங்கின. வட்டிவிகிதங்கள் வீழ்ச்சியடையத் தொடங்கின மற்றும் நிதிநிலைச் சந்தையானது பலவீனமடையத் தொடங்கிற்று. அவனது குடும்பத்தார் பழக்கப்பட்டிருந்த ஆடம்பரமான வாழ்வை ஆதரிக்க இனியும் அவனிடத்தில் பணம் இல்லாதிருந்தது. விரைவிலேயே அவன் மீண்டும் ஒரு போதும் திருப்பிச் செலுத்த இயலாத அளவுக்குக் கடனில் மூழ்கினான். அவன் முழுமையாகவே கடன் தீர்க்க இயலாதவன் ஆனான்.*

*சில வாரங்களிலேயே அவனது புன்முறுவல் மறைந்துபோய் சிடுசிடுப் பானது. இனியும் அவன் பலத்த நம்பிக்கையான அடிவைப்புகளை எடுத்து வைக்காது, குனிந்து தனது பார்வை பூமியில் நிலைகுத்தி இருக்க நடக் கலானான். அவன் தனது நண்பர்கள் மற்றும் வியாபாரக் கூட்டாளிகளுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்தப்பட்டான். உடைந்து போன மனிதனாக*

எதிர்பாராத சூழ்நிலைகளினால் நொறுக்கப்பட்டு, அவன் மீண்டும் வறுமை யால் தாக்கப்பட்டான். கடைசியில் அவன் அந்த சமூகத்திலிருந்து விலகிச்சென்று இன்னொரு நகரத்தில் தனது வாழ்வை மீண்டும் முதலில் இருந்து தொடங்கும்படிக்குச் சென்றான்.

முறிந்துபோன தன்மை என்பது ஒரு ஆசீர்வாதமாக இருக்கக் கூடும். சில வேளைகளில் தேவன், அவரது திட்டத்தை நமக்குள் நிறைவேற்று வதற்கு முன்பு, நம்மை முறிந்துபோகச் செய்து மீண்டும் ஒரு நிலைப்படுத்து கின்றார். தேவன் யாரென்று முதலாய் உணர்ந்தரியக் கூடாத அளவுக்கு மக்கள் அவரிடத்திலிருந்து விலகிச் செல்லும்போது அவர் தம்மிடத்தில் அவர்களின் கவனத்தைத் திருப்புவதற்கு சிலவற்றைச் செய்ய வேண்டியதாக உள்ளது. ஒரு நாட்டின் மக்கள் பாவம் என்றால் என்ன என்பதை இனியும் உணர்ந்தரிய இயலாத அளவுக்கு தங்கள் பாவம் நிறைந்த நடக்கையில் மிகவும் உணர்வுக் கூருடையவர்களாகும் போது, தேவன் அவர்களுக்கு நினைப்பூட்ட வேண்டியதாகிறது. தேவன் தமது மக்களைத் தமக்கு பொருந்தக்கூடிய வகையில் திரும்ப ஒன்றுகூட்டவும் அவர்களின் ஆத்துமாக்களை இரட்சிக்கவும் முறிந்து போகுதலை அனுமதிக்கலாம். கடினமான அனுபவங்களுக்குப் பின்பு, சில வேளைகளில் நாம், எவரொரு வரும் நமது வாழ்வை திரும்பவும் ஒன்றிணைக்க இயலாது என்று நினைக் கின்றோம், ஆனால் தேவன் அதைச் செய்ய முடியும்!

மனிதனுடைய இருப்பின் வலுக்குன்றிய மற்றும் பாதுகாப்பற்ற தன்மையானது “Humpty Dumpty”என்ற மழலையர் பாடலில் வெளிப்படுத்தப்படுகிறது:

Humpty Dumpty sat on a wall,
Humpty Dumpty had a great fall.
All the king’s horses,
And all the king's men,
Couldn’t put Humpty together again.[1]

நொறுங்கும் பையன் சுவரில் அமர்ந்தான்,
நொறுங்கும் பையன் தாழ விழுந்தான்.
அரசரின் குதிரைகள் யாவும்,
அரசரின் ஆட்கள் யாவரும்,
நொறுங்கும் பையனைச் சரியாக்க இயலவில்லை.

Humpty Dumpty (நொறுங்கும் பையன் ) என்பவன் முட்டை என்பதாகச் சித்தரிக்கப் படுகின்றான், அவன் மிக எளிதாக ஒரு நூறு துண்டுகளாக உடைக்கப்படுமளவுக்கு வலுக்குன்றியவனாக இருக்கின்றான். இந்த மழலையர் பாடலானது மனிதனின் தன்முனைப்பின் வலுக்குன்றிய தன்மையை, மனிதன் தன்னைக் குறித்தே உயர்வாக மதிப்பிடும் அவனது தன்மையை தக்க வகையில் வெளிப்படுத்துகிறது. மனிதன் தன்னைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தானது, அவன் தேவனைப் புறக்கணிக்கின்ற, கண்டு கொள்ளாதிருக்கின்ற அல்லது மறுக்கின்ற அளவை அடையும்போது, அவன்

*ஒரு வீழ்ச்சிக்குத் தயாராக அமைகின்றான். பவுல்,"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்" என்று எழுதினார் (1 கொரி. 10:12).*

*யூதாவின் மக்கள் தேவனைப் புறக்கணித்திருந்தனர், மற்றும் அவர் கடைசியில் அவர்களைச் சென்றுவிடும்படி அனுமதித்திருந்தார். எரேமியா யூதாவின் வீழ்ச்சியைத் தேவனுடைய செயல்களின் அடிப்படையில் விவரித்தார்: ''கர்த்தர் ... புறக்கணித்துவிட்டார்'' (2:6); ''கர்த்தர் ... நிர்மூலமாக்க நினைத்தார்" (2:8); "கர்த்தர் தாம் நினைத்ததைச் செய்தார்" (2:17). "தமது கோபத்தில்" (2:1), "தனது உக்கிரகோபத்திலே" (2:3), "தமது சினத்திலே'' (2:2), '' தம்முடைய உக்கிரத்தை'' (2:4) மற்றும் ''தமது உக்கிரமான கோபத்தில்" (2:6) என்ற சொற்றொடர்களில், யூதாவை அவர் விழச் செய்ததற்கான காரணம் வெளிப்படுத்தப்படுகிறது. தேவன் அதைச் செய்தார்; அவர் யூதாவை அழித்தார். அவர் தமது மேட்டிமையான மக்களை முதல் இழக்கச் செய்து, திரும்பவும் ஏழ்மைக்கு அனுப்பிவைத்தார்.*

*2:1-10ல் எரேமியா, யூதாவின்மீது தேவன் தமது சினத்தை விடுவித்த இரு பகுதிகளை விளக்கப்படுத்தி தண்டனையினால் வந்தது என்ன என்று கூறினார்.*

## தேவன் இராஜ்யத்தை முறித்துப்போட்டார்

*முதலாவது தேவன், யூதாவை ஒரு தேசம் என்ற வகையில் (இல்லாது) அழித்தார்.*

> *ஐயோ! ஆண்டவர் தமது கோபத்தில் சீயோன் குமாரத்தியை மந்தாரத்தினால் மூடினார், அவர் தமது கோபத்தின் நாளிலே தமது பாதபீடத்தை நினையாமல் இஸ்ரவேலின் மகிமையை வானத்தி லிருந்து தரையிலே விழத்தள்ளினார். ஆண்டவர் தப்பவிடாமல் யாக்கோபின் வாசஸ்தலங்களையெல்லாம் விழுங்கினார்,அவர் யூதா குமாரத்தியின் அரண்களையெல்லாம் தமது சினத்திலே இடித்து, தரையோடே தரையாக்கிப்போட்டார், ராஜ்யத்தையும் அதின் பிரபுக்களையும் பரிசுத்தக்குலைச்சலாக்கினார். அவர் தமது உக்கிரகோபத்திலே இஸ்ரவேலின் கொம்பு முழுவதையும் வெட்டிப் போட்டார், சத்துருவுக்கு முன்பாக அவர் தமது வலதுகரத்தைப் பின்னாகத் திருப்பி, சுற்றிலும் இருப்பதைப்பட்சிக்கிற அக்கினி ஜுவாலையைப்போல் யாக்கோபுக்கு விரோதமாக எரிந்தார். பகைஞனைப்போல் தம்முடைய வில்லை நாணேற்றினார், சத்துருவைப்போல் தம்முடைய வலதுகரத்தை நீட்டிநின்று, கண்ணுக்கு இன்பமானதையெல்லாம் அழித்துப்போட்டார்,சீயோன் குமாரத்தியின் கூடாரத்திலே தம்முடைய உக்கிரத்தை அக்கினியைப் போல் சொரியப்பண்ணினார். ஆண்டவர் பகைஞன் போலானார், இஸ்ரவேலை விழுங்கினார், அதன் அரமனைகளையெல்லாம் விழுங்கினார், அதின் அரண்களை அழித்து, யூதா குமாரத்திக்கு மிகுந்த துக்கிப்பையும் சலிப்பையும் உண்டாக்கினார் (2:1-5).*

*யூதா ஒரு சிறிய இராஜ்யமாக இருந்தது. அதைச் சுற்றிலும் எழும்பிக் கொண்டிருந்த வளர்ந்து வரும் அதிகாரங்களின் மத்தியில் அந்த நாடு இருந்ததே நமக்கு திகைப்பளிக்கக் கூடியதாக உள்ளது. அதற்கு அசீரியா, எகிப்து மற்றும் பாபிலோன் ஆகிய நாடுகளில் இருந்து வந்த அச்சுறுத்தல் களுக்கு எதிராக உயிர்பிழைத்திருக்கத் தேவன் பலத்தையும் பாதுகாப் பையும் அருளியிருந்தார். ஆதரவுதரும் அவரது வலக்கரமானது அந்த நாட்டின் விரோதிகளை அதற்கு எதிராக வரவிடாது தடுத்திருந்தது. அதை அந்த மக்கள் உணர்ந்து அறிந்திருந்த வரையிலும், அவர்களுடன் தேவன் தமது உறவைப் பராமரிக்க முடிந்திருந்தது. தங்களைப் பாதுகாத்தது யார் மற்றும் ஏன் என்பதை அவர்கள் மறந்தபோது, அவர்கள் தங்கள் விரோதிகளால் தாக்கப்படக் கூடியவர்கள் ஆனார்கள்.*

*தேவனுடைய கோபம் "யூதாவின் குமாரத்தியை" ஒரு மேகத்தால் மூடிற்று. பரலோகத்திலிருந்து அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அழகு கடந்துபோயிருந்தது. தேவன் யூதா தேசம் என்ற தமது பாதபடியை மறந்திருந்தார். அவர் தமது மக்களின் இல்லங்களையும் அரண்களையும் இரக்கமின்றி அழித்துப் போட்டார். அவர் இராஜ்யத்தையும் அதன் பிரபுக் களையும் விருத்தசேதனமற்ற புறதெய்வ வணக்கத்தார் மேற்கொள்ளும்படி செய்து தீட்டுப்படுத்தினார்.*

*தேவன் யாக்கோபுவை ஒரு விரோதியாக நடத்தினார். அவர் ஜுவாலித்து எரியும் அக்கினியைப்போல், இராணுவ முகாம்களில் நுழைந்து கூடாரங்களை எரித்துப்போடும் விரோதியைப்போல் தேசத்தைப் பட்சித்தார். ஒரு எதிராளியைப் போல் அவர் தமது வில்லை இழுத்து தமது உக்கிரத்தை ஊற்றினார்.*

*முதல் நான்கு வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பேரழிவுகளை வசனம் 5 மீண்டும் கூறுகிறது. மறுபடியும் கூறுதல் என்பது ஒரு சத்தியத்தை வலியுறுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட எபிரெய மொழி கவிதைத்துவ நடையாக இருந்தது. இவ்விதமாகப் பழைய ஏற்பாட்டுக் கவிதைத்துவ நடையானது வார்த்தை ஒலிகளின் எதுகை அல்லது மோனைக்கு மாறாக சிந்தனையின் ஒத்திசைவுகளால் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. தேவனுக்கு உண்மையற்றுப்போன மக்கள் "விழுங்கப்பட்டனர்" என்ற சத்தியம் இங்கு திரும்பவும் எடுத்துரைக்கப்படுகிறது.*

## தேவன் தமது ஆவிக்குரிய உடன்படிக்கையின்மீது தமது பின்புறத்தைத் திருப்பினார்

*இரண்டாவதாக, தேவன் யூதாவைத் தமது மக்களாயிராதபடி புறக்கணித்தார். அவர்களுடன் அவர் செய்திருந்த உடன்படிக்கைக்கு அவர் தமது பின்புறத்தைத் திருப்பினார்.*

> தோட்டத்தின் வேலியைப்போல் இருந்த தம்முடைய வேலியைப் பலவந்தமாய் பிடுங்கிப்போட்டார், சபைகூடுகிற தம்முடைய ஸ்தலங்களை அழித்தார், கர்த்தர் சீயோனிலே பண்டிகையையும் ஓய்வு

*நாளையும் மறக்கப்பண்ணி, தமது உக்கிரமான கோபத்தில் ராஜா வையும் ஆசாரியனையும் புறக்கணித்துவிட்டார். ஆண்டவர் தமது பலிபீடத்தை ஒழித்துவிட்டார், தமது பரிசுத்த ஸ்தலத்தை வெறுத்து விட்டார், அதினுடைய அரமனைகளின் மதில்களைச் சத்துருவின் கையில் ஒப்புக்கொடுத்தார், பண்டிகைநாளில் ஆரவாரம் பண்ணு கிறதுபோல் கர்த்தரின் ஆலயத்தில் ஆரவாரம்பண்ணினார்கள். கர்த்தர் சீயோன் குமாரத்தியின் அலங்கத்தை நிர்மூலமாக்க நினைத்தார், நூலைப்போட்டார், அழிக்காதபடித் தம்முடைய கையை அவர் முடக்கிக்கொண்டதில்லை, அரணிப்பையும் அலங்கத்தையும் புலம்பச்செய்தார், அவைகள் முற்றிலும் பெலனற்றுக் கிடக்கிறது. அவள் வாசல்கள் தரையில் அமிழ்ந்திக்கிடக்கிறது, அவள் தாழ்ப்பாள்களை முறித்து உடைத்துப்போட்டார், அவள் ராஜாவும் அவள் பிரபுக்களும் புறஜாதியாருக்குள் இருக்கிறார்கள், வேதமு மில்லை, அவள் தீர்க்கதரிசிகளுக்குக் கர்த்தரால் தரிசனம் கிடைக்கிறது மில்லை (2:6-9).*

தேவன் யூதா இராஜ்யத்தை அழித்தார் என்பதைக் காட்டிலும் அவர் யூதாவுடனான தமது உடன்படிக்கையின் உறவைக் கைவிட்டார் என்பதினால் நாம் அதிகம் திகைப்படையலாம். மொழிநடை தெளிவான தாக உள்ளது: தேவன் யூதாவுடனான தமது ஆவிக்குரிய பிணைப்புகளைக் குறைந்தபட்சம் தற்காலிகமாகத் துண்டித்துக் கொண்டார்.

பாபிலோனின் படையெடுப்பின் மூலமாக அவர் தமது கூடாரத்திற்கு வன்முறை செய்து, தமது சபைகூடிவரும் இடத்தை அழித்து நியமிக் கப்பட்ட பண்டிகைகளும் ஓய்வுநாட்களும் மறக்கப்படுவதற்கு காரண ராகி, தமது பலிபீடத்தையும் அதன் ஆசாரியர்களையும் விலக்கிவைத்து, தமது பரிசுத்த ஸ்தலமாகிய தேவாலயத்தைக் கைவிட்டார். அவர் பரிசுத்த நகரத்தை அழித்து அதைப் பாதுகாத்திருந்த மதில்களை இடிபடச் செய்தார். எரேமியா "வேதமுமில்லை, அவள் தீர்க்கதரிசிகளுக்குக் கர்த்தரால் தரிசனம் கிடைக்கிறதுமில்லை" என்று எழுதியது (2:9) எல்லாவற்றிலும் கவலை மிக்கதாக உள்ளது. குறைந்தபட்சம் சற்றுக்காலத்திற்குத் தேவன் தமது மக்களிடம் பேசாதிருந்தார்.

ஆம், தேவன் யூதாவின்மீது அழிவு வரச்செய்தார், ஆனால் தேவன் அவ்வாறு செய்ததற்கு மக்களே காரணமாய் இருந்தனர். அவர்கள் புறதெய்வ வணக்கத்தாரைத் தேவாலயத்திற்குள் கொண்டுவந்ததால் அதை (தேவாலயத்தின் நடைமுறையை) மீறியிருந்தனர். அவர்கள் அவரது பலிபீடத்தின்மீது விக்கிரகங்களுக்குப் பலிசெலுத்தியதின்மூலம் அதை இலேசாக நினைத்திருந்தனர். ஆசாரியர்கள் மக்களின் விருப்பங்களுக்கு அடிபணிந்து, தேவனுக்கும் மக்களுக்கும் இடையில் மத்தியஸ்தர் களாயிருத்தல் என்ற தங்களின் பரிசுத்த ஊழியத்தை மீறியிருந்தனர். அவர்கள் நீண்டகாலமாக நியாயப்பிரமாணத்தைப் புறக்கணித்து இருந்தனர். அவர்களின் தீர்க்கதரிசிகள், மக்களிடம் கூறும்படி தேவன் தங்களிடத்தில் கூறியவைகளைச் சொல்வதற்கு மாறாக, மக்கள் கேட்க விரும்பியதாகத் தாங்கள் நினைத்தவற்றைக் கூறினர். அவர்கள் தேவனு

டனான தங்கள் உடன்படிக்கையை முறித்திருந்தனர். இந்தக் கண்ணோக்கிலிருந்து காணுகையில் பெருந்துன்பத்திற்கு உண்மையிலேயே காரணமாயிருந்தது யார்?

## விரும்பத்தக்க விளைவைத் தேவன் சாதித்தார்

யூதாவின்மீது வந்த தண்டனை கடுமையானதாகக் காணப்பட்டாலும், விரும்பத்தக்க விளைவைத் தேவன் நிறைவேற்றினார்: முறிந்துபோகுதல். அவர்களின் பலவீனப்படுத்தப்பட்ட நிலையில், மக்கள் தங்களுக்குத் தேவன் தேவை என்பதை உணர்ந்து அறிந்தனர்.

> சீயோன் குமாரத்தியின் மூப்பர்கள் தரையில் உட்கார்ந்து மௌனமாய் இருக்கிறார்கள், தங்கள் தலைகளின் மேல் புழுதியைப் போட்டுக் கொள்கிறார்கள், இரட்டு உடுத்தியிருக்கிறார்கள், எருசலேமின் கன்னியர்கள் தலைகவிழ்ந்து தரையை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள் (2:10).

மூப்பர்கள் இரட்டு உடுத்தியவர்களாய், தங்கள் தலைகளின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு தரையில் மௌனமாய் உட்கார்ந்து இருந்தனர். இது புலம்புவதற்கு வழக்கமாகப் பயன்படுத்தப்படும் இருப்பு நிலையாக இருந்தது. யோபுவைப் பார்ப்பதற்கு அவரது மூன்று நண்பர்களும் வந்தபோது, அவர்கள் அழுது, தங்கள் உடைகளைக் கிழித்துக்கொண்டு, தங்கள் தலைகளின்மீது புழுதியைப் போட்டுக் கொண்டு, ஏழு நாட்கள் இரவும் பகலும் அமைதியாக அமர்ந்திருந்தனர் (யோபு. 2:12, 13). இது இன்றைய நாட்களிலும் ஆப்பிரிக்கக் கலாச்சாரத்தில் ஒரு பொதுவான நடைமுறையாக உள்ளது. ஜாம்பியா நாட்டின் காபங்கா என்ற இடத்தின் அருகில், 1983ல் குடும்ப சமுதாயத் தலைவர் ஒருவர் இறந்துபோனபோது, மக்கள் அந்தக் குடும்பத்திற்கு இரங்கல் தெரிவிக்க வந்தனர். புலம்புபவர்களில் சிலர் வெள்ளை உடை உடுத்தி, கிராமத்திற்கு அடுத்திருந்த உழப்பட்ட வயல் ஒன்றில் அமர்ந்திருந்ததை நான் கண்டேன். அவர்கள் புழுதியை எடுத்து ஆகாயத்தில் இறைத்து அது தங்கள் தலைகளில் விழும்படிக்கு அனுமதித்தனர்.

ஒரு காலத்தில் மேட்டிமையாயிருந்து, தங்கள் தலைகளை நிமிர்த்தி நடந்துகொண்டிருந்த எருசலேம் குமாரத்திகள் இப்போது தங்கள் தலைகள் தரையைப் பார்த்து தாழ்ந்திருக்க நடந்தனர். தாழ்மையால் மாத்திரம் அல்ல, ஆனால் சிறுமைப்படுத்தப்பட்டதால் நாம் வழக்கமாக செய்கின்றபடி, அவர்கள் "இங்கிருந்து நாம் எங்கே செல்லுகின்றோம்?" என்று கேட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

## செய்தி என்ன?

உடைந்துபோன இருதயத்துடன், உடைந்துபோன ஆவியுடன் அல்லது நொறுக்கப்பட்ட தன்முனைப்புடன் உங்களை நீங்கள் அடையாளப் படுத்திக் கொள்ள இயலுமா? நீங்கள் வெட்கத்தினாலும் தாழ்த்தப்படு வதினாலும் துன்புறுகின்றீர்களா? நீங்கள் உங்களுக்குச் சொந்தமான தன்னிரக்கத்தினால் விழுங்கப்படும்படி பின்வாங்கியிருக்கின்றீர்களா? உங்கள் தவறுகளில் இருந்து நீங்கள் கற்றுக்கொள்ளவும் நீங்கள் முன்பிருந்த நிலையைவிட மேன்மையான நிலைக்கு மீண்டும் உங்களை இடுவதற்குத் தேவனை அனுமதிக்கவும் உங்களால் முடிந்ததென்றால், ஒருவேளை அது மோசமானதாக இராதிருக்கலாம்.

மலைப்பிரசங்கத்தை இயேசு கூறத் தொடங்கியபோது, “ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக ராஜ்யம் அவர்களுடை யது” (மத். 5:3) என்பதே அவரது வாயிலிருந்த வந்த முதல் கொள்கையாக இருந்தது. ‘‘பாக்கியவான்கள்’’ என்ற வார்த்தை சிலவேளைகளில் “மகிழ்ச்சியானவர்கள்” அல்லது “சந்தோஷத்தினால் நிறைந்தவர்கள்” என்று மொழிபெயர்க்கப்படுகிறது. ஒரேவேளையில் ஒருவர் சந்தோஷத்தினால் நிறைந்தும் ஆவியில் எளிமையுடனும் இருக்கக் கூடுவது எப்படி? “ஆவியில் எளிமை’’ என்பது சந்தோஷத்தையல்ல ஆனால் மனச்சோர்வான நிலையையே காட்டுகிறது.

இவ்வசனப்பகுதியில் உள்ள “எளிமை” என்பதற்கான வார்த்தையானது ஒன்றுமின்மையை விடக் குறைவானதை - முதல் இழந்த, கைவிடப்பட்ட அல்லது ஏழ்மையால் தாக்கப்பட்ட நிலையை - கொண்டுள்ளதை அர்த்தப்படுகிறது. முதல் இழந்த நிலையில் உள்ளவருடைய இருதயம் மகிழ்ச்சியுடன் இருக்க முடியுமா? ஆம்! இப்படிப்பட்ட இருதயங்களில்தான் தேவன் கிரியை செய்ய முடியும். அவர் இப்படிப்பட்ட இருதயங்களில் வாசம்பண்ணி, அவற்றை உருப்படுத்தி, அவற்றைத் தமது சாயலாக்குகின்றார். அவரால் இந்த இருதயங்களுக்கு வாழ்வின் மாபெரும் நோக்கத்தையும் அர்த்தத்தையும் தரமுடியும். அவர் தாக்கப்பட்ட இந்த இருதயங்களை எடுத்து அதைப் பழைய நிலைக்குத் திருப்ப முடியும். இந்த இருதயங்கள், தங்களுக்குள் எவ்வளவு உதவியற்று மற்றும் நம்பிக்கையற்று உள்ளோம் என்று உணர்ந்து அறிந்தவர்களின் இருதயங்களாக உள்ளன. அவர்கள் தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, “ஆண்டவரே என்னை எடுத்து உமக்குப் பொருத்தமான வகையில் என்னைத் திருப்பியருளும்” என்று கூற மனவிருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

இயேசுவே நமது மாதிரியாக இருக்கின்றார். பிலிப்பியர் 2:5-8ல் பவுல் பின்வருமாறு கூறினார்:

> கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமா யிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர்

சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே” (2 கொரி. 8:9). இவ்வசனப் பகுதியில், “தரித்திரர்” மற்றும் “தரித்திரம்” என்பவற்றிற்கான வார்த்தைகள் இயேசு மத். 5:3ல் பயன் படுத்திய அதே வார்த்தையாகவே உள்ளன. இயேசு நமக்காக ஏழ்மையால் தாக்கப்பட்டவரானார், தம்மையே ஒன்றுமற்றவராக்கினார், தம்மையே வெறுமையாக்கினார். அவரது ஒன்றுமற்றதன்மையானது எதிர்பாராத சூழ்நிலைகளினால் கொண்டுவரப் படவில்லை. அவருடைய அந்த சூழ்நிலையானது முற்றிலும் மனப்பூர்வமானதாக இருந்தது. நாம் அவரது ஐசுவரியங்களில் பங்கடையும்படிக்கு அவர் நமக்காக ஒன்று மற்றிருப்பதைத் தேர்ந்துக்கொண்டார், இருப்பினும் இயேசு தேவனுக்குச் சமமானவராக இருந்தார் மற்றும் அவ்வாறே இப்போதும் இருக்கின்றார். அவர் தேவனாகவே இருக்கின்றார்! (யோவா. 1:1). அவருடைய நிலையை -பிதாவுடன் ஒன்றித்திருக்கும் நிலையை- நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் நம்மைப்போல் ஆனார்.

நாம் நமது வாழ்வில் “சுயத்தை” வெறுமையாக்க வேண்டும் என்று இயேசு நமக்குப் போதிக்கிறார். நாம் அவரைக் கண்டு பின்பற்றக் கூடும்படிக்கு நமது வழியிலிருந்து விலக வேண்டும். சுயத்தினால் நிறைந்துள்ள இருதயங்களில் தேவனுக்கு இடம் இருப்பதில்லை.

---

குறிப்பு

[1]“Humpty Dumpty,” *Childcraft: The How and Why Library*, vol. 1, *Once Upon a Time* (Chicago: World Book, Inc., 1989), 20.

## தேவன் இன்னமும் உங்கள் கவனத்தைப் பெற்றுள்ளாரா?

தேவனுடைய அழைப்பை இனியும் மக்கள் கேட்கக் கூடாத அளவுக்கு அவரிடத்தில் இருந்து இவ்வளவு தூரத்தில் விலகிச் சென்றிருந்த தேசமானது தங்களைப் பிழைக்க வைப்பவரும் படைத்தவருமான அவரிடத்தில் திரும்புவதற்குப் பெருந்துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது. மக்களின் ஆவிக்குரிய தேவைகள் குறித்து அலட்சியப்போக்குடன் இருக்கும் அளவுக்கு உலகநடக்கையின் பாகமாகி விடுகின்ற சபை நடத்துபவர்களும் பிரசங்கியார்களும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து எழுப்பப்படுவதற்கு உபத்திரவத்தை அனுபவித்தாக வேண்டியுள்ளது. எப்படி ஜெபிப்பது

*மற்றும் எப்படி தியாகமாக வாழ்வது என்பதை மறந்துபோன ஒரு சபையானது வேறு சில வழிமுறைகளின் மூலமாக முழந்தாள்படியிடச் செய்யப்படுவது அவசியமாக உள்ளது. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் இரட்சிப்பு என்பதைக் காட்டிலும், உலகப்பிரகாரமான வெற்றியை அதிகமாய்க் கொண்டுள்ள சபையானது தனது செல்வாக்கு நீங்கப்பெறுதல் அவசியமாய் இருக்கலாம்.*

*தேவன் தமது வசனத்தின் மூலம் நமது கவனத்தைப் பெற முடியாவிட்டால், அவர் யூதாவின் கவனத்தைப் பெறுவதற்கு பயன் படுத்திய வழியையே நமது கவனத்தை பெறுவதற்குப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ளலாம். இது மிக நவீனமான உலகத்தில் மிகவும் அபாயமானதாக இருக்கக்கூடும். டேவிட் வெல்ஸ் அவர்கள், "தேவன் தமது சபையில் இருந்து மறைந்து கொண்டிருக்கின்றார்," அதாவது அவரது பரிசுத்தத் தன்மையானது சபைக்கு அந்நியமாக உள்ளது, மற்றும் உண்மையில் சபையில் நிறைவான அதிகாரத்துவம் என்பது சுயதேர்ந்து கொள்ளுதலாக உள்ளது என்று கருத்துத் தெரிவித்து இருக்கின்றார்.[1]*

*வரலாறு தன்னையே திருப்பிக்கொண்டுள்ளதா? இன்றைய நாட்களில் மக்கள் தங்கள் சுய தேர்ந்துகொள்ளுதல்களே தேவனுடைய தேர்ந்து கொள்ளுதல்களாகவும் உள்ளன என்று தங்களையே நம்பி இணங்கச் செய்வதற்குச் செயல்வலிவற்ற திறமைகளைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. அந்த உபதேசத்தையே எரேமியாவின் காலத்தில் இருந்த தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் பிரசங்கித்தனர். மக்கள் விரும்பித்தேர்ந்து கொள்ளுபவைகளைத் தேவனுடைய சித்தம் என்பதுபோல் பிரசங்கி யார்கள் மறுபடியும் பிரசங்கிக்கின்றனர்.*

*தேவனுக்கு உண்மையாயிருத்தலும் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தலும் ஒரு காலத்தில் கொண்டிருந்த அர்த்தத்தை இனியும் கொண்டிராது. அவரது சத்தியங்களை அறிவிப்பதாக உரிமைகோருபவர்கள் மத்தியிலும்கூட அவைகள் முற்றானவைகள் என்று இனியும் நம்பப்படாது. சபையானது உலகத்தின்மீது செல்வாக்குச் செலுத்துவதைவிட அதிகமாக, உலகமானது சபையின்மீது செல்வாக்குச் செலுத்துகிறது. சபையானது சமுகம் நம்மை நம்பச்செய்யும் விஷயங்கள் மற்றும் தேவன் நம்மை நம்பச்செய்யும் விஷயங்கள் ஆகியவற்றிற்கிடையில் சிக்கிக்கொண்டுள்ளது மற்றும் நம்மை ஏற்றுக்கொண்டுள்ளது.[2]*

*ஆப்பிரிக்காவின் ஜிம்பாவேயில் ஊழியம்செய்து, கிறிஸ்துவில் கொண்டிருந்த விசுவாசத்திற்காக மரித்த ஒரு இளம் ஊழியக்காரரின் விசுவாசக்கூற்று மற்றும் ஒப்புக்கொடுத்தலில் என் மனம் ஈர்க்கப்பட்டது. அவர் பின்வருமாறு கூறினார்:*

> *நான் வெட்கப்படாதவர்களின் ஐக்கியத்தில் ஒரு பாகமாக இருக்கின்றேன். நான் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுள்ளேன். முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது - நான் அவரது சீஷனாக இருக்கின்றேன். நான் பின்னே திரும்பிப் பார்க்கமாட்டேன், மேலே அனுமதிக்கமாட்டேன், மெதுவாகச் செயல்படமாட்டேன்,*

*புறம்பே திரும்பிச் சென்றுவிடமாட்டேன் அல்லது செயலற்று இருக்கமாட்டேன். எனது கடந்தகாலம் மீட்கப்பட்டுள்ளது, எனது நிகழ்காலம் கருத்தை ஏற்படுத்துகிறது, எனது எதிர்காலம் பாதுகாப்பானதாக உள்ளது. நான் முடிந்துவிட்டேன், எனது வாழ்வு தாழ்மையான வாழ்தலுடன், பார்த்து நடப்பதுடன், மென்மையான முழங்கால்களுடன், வண்ணமற்ற கனவுகளுடன், பயிற்றுவிக்கப்பட்ட தரிசனங்களுடன், உலகப்பிரகாரமான பேசுதல்களுடன், மலிவான கொடுத்தலுடன் மற்றும் அளவில் சிறுத்த இலக்குகளுடன் முடிக்கப்பட்டுள்ளது.*[3]

*தேவன் உங்களைக் கொண்டிருந்தால், உலகம் உங்களைப் பெற இயலாது. தேவன் உங்கள் கவனத்தைப் பெற்றிருந்தால், அவர் உங்கள் வாழ்வை எடுத்தாள முடியும். ஏதாவது ஓருவழியில், தேவனால் நீங்கள் புதுசிருஷ்டியாக்கப்படும்படி உங்கள் பழைய மனுஷன் நொறுக்கப் படுவான்.*

*தாவீது செய்ததுபோல் பின்வருமாறு பாடி ஜெபியுங்கள்:*

*தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் (சங். 51:10).*

---

*குறிப்புகள்*

[1]David F. Wells, *God in the Wasteland* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1994), 148-49. [2]Ibid., 154. [3]Brennan Manning, *The Signature of Jesus* (Sisters, Oreg.: Multnomah Press, 1996), 31.